CSI Tamil Parish - Abu Dhabi

25 Years 2000 2025

# தூது

நற்செய்தி துணுக்குகள்

**“உன் தேவனாகிய கர்த்தரை நினைப்பாயாக; அவரே உன் பிதாக்களுக்கு ஆணையிட்டுக்கொடுத்த தம்முடைய உடன்படிக்கையை உறுதிப்படுத்தும்படி, இந்நாளில் உனக்கு உண்டாயிருக்கிறது போல, ஐசுவரியத்தைச் சம்பாதிக்கிறதற்கான பெலனை உனக்குக் கொடுக்கிறவர்” [உபாகமம் 8:18].**

**பிப்ரவரி – 2025**

**(மடல் - 25) செய்தி – 2**

# பொருளடக்கம்

| | |
|---|---|
| ஆயர் மடல் | 2 |
| ஆயரம்மா மடல் | 4 |
| பெண்கள் பகுதி | 6 |
| Children's Corner | 10 |
| வேத வினாக்கள் | 21 |
| கோதுமை மணி | 24 |
| துணுக்குகள் | 26 |
| ஆலய பக்கம் | 28 |

# ஆயர் மடல்

**"உன் தேவனாகிய கர்த்தரை நினைப்பாயாக; அவரே உன் பிதாக்களுக்கு ஆணையிட்டுக்கொடுத்த தம்முடைய உடன்படிக்கையை உறுதிப்படுத்தும்படி, இந்நாளில் உனக்கு உண்டாயிருக்கிறதுபோல, ஐசுவரியத்தைச் சம்பாதிக்கிறதற்கான பெலனை உனக்குக் கொடுக்கிறவர்" [உபாகமம் 8:18].**

கிறிஸ்துவுக்குள் அன்பானவர்களே!

இயேசு கிறிஸ்துவின் இனிய நாமத்தில் வாழ்த்துகிறேன். ஆண்டவரின் பெரிதான கிருபையினால் புதிய ஆண்டின் முதல் மாதத்தை நிறைவுசெய்து, புதிய மாதத்துக்குள் வந்திருக்கிறோம். கடந்த மாதம் முழுவதும் ஆண்டவர் நம்மையும், நமது குடும்பத்தையும் பாதுகாத்து வழிநடத்தி வந்திருக்கிறார், ஆண்டவரை ஸ்தோத்தரிக்கிறேன். கடந்த மாதத்தில் Junior Church retreat, Junior Church Picnic மற்றும் Church Picnic சிறப்பாக நடைபெற ஆண்டவர் கிருபை செய்தார். ஆண்டவருக்கு நன்றி செலுத்துகிறேன். குறிப்பாக திருநெல்வேலி திருமண்டல பேராயர் Rt.Rev.Dr. ARGST. Barnabas அவர்களால் திடப்படுத்தல் பெற்று நமது திருச்சபையின் முழு அங்கத்தினர்களாகச் சேர்க்கப்பட்டிருக்கும் அன்பு பிள்ளைகளை அன்புடன் வாழ்த்துகிறேன். துய ஆவியானவரின் ஆற்றலால் பலப்பட்டு விசுவாசத்தில் உறுதியாய் நிலைத்திருந்து ஆண்டவருக்காக சான்றுபகர ஆண்டவர் அருள் செய்வாராக. இந்தப் புதிய மாதம் நம் அனைவருக்கும் ஆசீர்வாதத்தின் மாதமாக அமைய ஆண்டவர் கிருபை செய்வாராக.

உபாகம் புத்தகம், இஸ்ரவேல் மக்களைக் கடவுளின் துணையோடு வழிநடத்தி வந்த மாபெரும் தலைவனாகிய மோசே, தன் மக்களை விட்டுப் பிரிய இருக்கும் தருவாயில் ஆற்றிய பிரியா விடை அறிவுரையாகும். (Farewell Address). இஸ்ரவேல் மக்கள் சுதந்திர நாட்டில் உயர்ந்த சமுக ஒழுக்கமுள்ள வாழ்வுக்குத் தேவையானவற்றை மோசே ஆலோசனையாகக் கூறுகிறார்.

மோசேயின் ஆலோசனைகள் இஸ்ரவேல் மக்களுக்குமட்டுமல்ல நமது கிறிஸ்தவ வாழ்வுக்கும் அடிப்படைக் கொள்கையாக இருக்கிறது. இஸ்ரவேல் மக்களின் 40 ஆண்டுகால வனாந்தரப் பயணத்திலே ஆண்டவர் அவர்களை ஒரு உயரிய சமுக வாழ்வுக்குத் தயார்படுத்துகிறார். இவர்கள் கடவுளால் தெரிந்து கொள்ளப்பட்ட மக்கள் என்பதைப், பிற மக்கள் அறிந்து கொள்ளும் வண்ணமாக அவர்களின் வாழ்க்கை அமைந்திருக்க வேண்டும் என்று ஆண்டவர் விரும்பியதால் அவர்களின் சிறப்பான சமுகவாழ்வுக்கான மூன்று குறிப்புகளை மோசே சுட்டிக்காட்டுகிறார்.

**1. ஆண்டவரின் கடந்தகால செயலாற்றுதலை நினைவூட்டுகிறார்: உபாகமம் 8:1-5**

எகிப்திலிருந்து விடுதலைபெற்று கடந்த 40 ஆண்டுகளாக வனாந்தரப் பயணத்தில் ஆண்டவர் எப்படி இஸ்ரவேல் மக்களை வழி நடத்தி வந்தார் என்பதை மோசே நினைவூட்டுகிறார். ஆண்டவரின் கட்டளைகளை நீங்கள் கடைப்பிடிப்பீர்களோ, மாட்டீர்களோ என உங்கள் உள்ளத்தின் சிந்தனைகளை அறிந்து கொள்ள உங்களைப்

பரிசோதிக்கிறார். ஒரு தந்தை தன் மகனுக்குக் கற்றுக் கொடுப்பதுபோல ஆண்டவர் இஸ்ரவேல் மக்களுக்குக் கற்றுக் கொடுக்கிறார். ஒவ்வொரு நாளும் இஸ்ரவேல் மக்கள் கடவுளையே சார்ந்திருக்க வேண்டும் என்பதற்காக ஒவ்வொரு நாளும் உணவுக்காக மன்னாவைக் கொடுக்கிறார். அதோடு ஆண்டவரின் அன்பு மிக்க பராமரிப்பையும் நியாபகப்படுத்துகிறார்.

**2. ஆண்டவரின் நிகழ்கால ஆசீர்வாதத்தை நினைவூட்டுகிறார்: உபாகமம் 8:6-9**

பாலைநிலப் பயணத்திலே ஆண்டவரின் அற்புதமான செயலாற்றலை நினைவுப்படுத்திய மோசே, ஆண்டவர் வாக்களித்த நாட்டின் ஆசீர்வாதத்தையும் பட்டியலிட்டுக் காட்டுகிறார். மக்களின் வாழ்வாதாரமாக இருக்கின்ற தண்ணீர் வளத்தை முதன்முதலில் குறிப்பிடுகிறார். கீழ் நாடுகளில் தண்ணீர் மிகவும் மதிப்புமிக்கது என்பதால் ஆறுகளும் ஊற்றுகளும், ஏரிகளும் நிறைந்திருக்கிற தேசம் என்கிறார். (வச. 7) எல்லா இயற்கை வளங்களும், தாதுக்களும் நிறைந்த தேசமாக ஆண்டவர் கொடுக்கிறார் என்பதை மோசே நினைவூட்டுகிறார். ஆண்டவர் நமக்குக் கொடுத்த நன்மைகளையும், ஆசீர்வாதங்களையும் நினைத்துப்பார்ப்போம். முகவரியே இல்லாமல் வாழ்ந்து கொண்டிருந்த நமக்கு முகவரி கொடுத்து, நமது எல்லாத் தேவைகளையும் தாராளமாக அளித்து ஆசீர்வதித்த தேவனை நாம் நன்றியோடு ஸ்தோத்தரிக்க அழைக்கப் பட்டிருக்கிறோம்.

**3. ஆண்டவரின் அன்புக்கு, நமது பங்களிப்பை நினைவூட்டுகிறார்: உபா 8:10-18)**

இஸ்ரவேல் மக்களோடு செய்த உடன்படிக்கையில் தமது பங்கைத் தாராளமாகவும் மனப்பூர்வமாகவும் நிறைவேற்றிய ஆண்டவர், இஸ்ரவேல் மக்களும் தங்களது பங்கை நிறைவேற்ற வேண்டுமென்று எதிர்பார்க்கிறார். பல வேளைகளில் தமது தேவைகள் நிறைவேறிய உடனே தமக்கு உதவி செய்த மனிதர்களை மறக்கின்ற மனநிலையிலே மனிதன் இருக்கிறான். ஆனால் ஆண்டவர் மனிதனிடம் எதிர்பார்ப்பது நன்றியை மட்டுமே. (வச 10) அதோடு தமது கட்டளைக்கும் கற்பனைக்கும் கீழ்ப்படிந்து நடக்கவேண்டும் என்பதே. ஏனெனில் கற்பனைகளைக் கைக்கொள்கிறவன் மட்டுமே அவரிடம் அன்பு செலுத்துகிறான்.

ஆண்டவர் நமக்கு ஏராளமான ஆசீர்வாதங்களை அருளிச் செய்திருக்கிறார். தாழ்வில் இருந்த நம்மை உன்னதமான உயர்வான நிலைக்குக் கொண்டு வந்திருக்கிறார். நாம் எப்பொழுதும் நன்றி செலுத்தவும் அவருடைய கற்பனைகளையும் கட்டளைகளையும் கடைப்பிடிக்கிற மக்களாக வாழ அழைக்கப்பட்டிருக்கிறோம்.

கர்த்தர் உங்களையும் உங்கள் குடும்பங்களையும் ஆசீர்வதிப்பாராக!

*Res. : 02 6791915*
*Mobile : 054 7401421*
*mail : asamuelrev@gmail.com*

*கிறிஸ்துவின் பணியில்*
*தங்கள் அன்பிற்குரிய ஆயர்*
Rev. Dr. A. Samuel

கிறிஸ்துவுக்குள் பிரியமானவர்களே!

நம்முடைய பிதாவாகிய தேவனாலும் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினாலும் உங்களுக்குக் கிருபையும் சமாதானமும் உண்டாவதாக. கடந்த மாதம் முழுவதும் ஆண்டவர் நம்மையும் நம்முடைய குடும்பத்தையும் அற்புதமாக ஆச்சரியமாகப் பாதுகாத்து வழிநடத்தி வந்ததற்காக ஆண்டவருக்கு நன்றி செலுத்துகிறேன். இந்த புதிய மாதம் நமக்கும் நமது குடும்பத்திற்கும் ஆசீர்வாதமாக இருக்க ஆண்டவர் கிருபை செய்வாராக.

ஆசீர்வதிக்கப்பட்ட வாழ்வுக்கு திருமறை மிகவும் அவசியம். பவுல் அப்போஸ்தலா, “யூதனுடைய மேன்மை எது? விருத்தசேதனமா? நிச்சயமாக இல்லை. தேவனுடைய வாக்கியங்கள் அவர்களிடத்தில் ஒப்புவிக்கப்பட்டதுதான் விசேஷித்த மேன்மை” என்கிறார்(ரோமர் 3:1,2). கிறிஸ்தவர்களாகிய நமக்கு கொடுக்கப்பட்டிருக்கின்ற மிகப்பெரிய பொக்கிஷம் ஆண்டவர் நமக்குத் தந்திருக்கின்ற மதிப்பு மிக்கத் திருமறை, ஆசீர்வாதத்தின் பெட்டகம். பல வேளைகளில் இதை அறியாமல் நாம் ஆசீர்வாதத்தைத் தேடி எங்கெல்லாமோ அலைந்துகொண்டிருக்கிறோம்.

### *திருமறை நமது கிறிஸ்தவ வாழ்வுக்குக் கொடுக்கும் நன்மைகள்:*

### *1. வாழ்க்கையை வசந்தமாக்கும் திருமறை :*

சங்கீதக்காரன் சொல்கிறான், கர்த்தருடைய வேதத்தில் பிரியமாயிருந்து, இரவும் பகலும் அவருடைய வேதத்தில் தியானமாயிருக்கிற மனுஷன் பாக்கியவான். அவன் நீர்க்கால்களின் ஓரமாய் நடப்பட்டு, தன் காலத்தில் தன் கனியைத் தந்து, இலையுதிராதிருக்கிற மரத்தைப்போலிருப்பான், அவன் செய்வதெல்லாம் வாய்க்கும். சங்கீதம் 1:2,3 வேதத்தை நேசிக்கிறவர்கள் வாழ்வு செழிப்புள்ளதாயும், கனி கொடுப்பதாயும் இருக்கும். வேதம் நம்முடைய வாழ்வை வசந்தமாக்கும் வல்லமை பெற்றது. ஒவ்வொரு புதிய நாளுக்குள் பிரவேசிக்கும் போதும், நாம் வேதத்தை வாசித்து அதை நடைமுறைப்படுத்தும்போது நம்முடைய வாழ்வு ஆசீர்வாதமாகும்.

### *2. சோதனையை மேற்கொள்ளும் ஆற்றலைக் கொடுக்கும் திருமறை:*

இயேசு கிறிஸ்து வேத வசனங்கள் வழியாக சேதனைகளை மேற்கொள்ளுகிறார். மனுஷன் அப்பத்தினாலே மாத்திரமல்ல, தேவனுடைய வாயிலிருந்து புறப்படுகிற ஒவ்வொரு வார்த்தையினாலும் பிழைப்பான் என்கிறார். (மத்தேயு 4:4) பிசாசை தோற்கடிக்க இயேசு கிறிஸ்து மேற்கொண்ட ஆயுதம் வேத வசனமே. இன்று பல்வேறு விதமான சோதனைகளால் நாம் சூழப்பட்டிருக்கிறோம். சோதனை பாவம் அல்ல. ஆனால் விரைவாக நம்மை பாவத்துக்குள் அழைத்து சென்றுவிடும். பிசாசை மேற்கொள்ளும் ஆற்றலை வேதவசனங்கள் நமக்குத்தருகிறது.

***3. பாடுகளில் ஆறுதல் கொடுக்கும் திருமறை:***

சங்கீதக்காரன் சொல்கிறார், உமது வேதம் என் மனமகிழ்ச்சியாயிராதிருந்தால், என் துக்கத்திலே அழிந்து போயிருப்பேன் என்கிறார். (சங்கீதம் 119:92,93) பாடுகள் துன்பங்கள் நமது வாழ்வின் ஒரு பகுதி. யோபு சொல்கிறார்: ஸ்திரீயினிடத்தில் பிறந்த மனுஷன் வாழ்நாள் குறுகினவனும் சஞ்சலம் நிறைந்தவனுமாயிருக்கிறான். நமது வாழ்வின் பெரும் பகுதியை பாடுகளின் வழியாகத்தான் கடக்க வேண்டியுள்ளது. ஆண்டவரின் திருவார்த்தையாகிய அவரின் சத்தியவேதமே நமக்கு ஆறுதல் அளிக்கிறது. தாவீது தனக்கு ஏற்பட்ட துன்பங்களின் மத்தியில் உமது வேதத்தை மறவேன் என்கிறார். ஏனெனில் துன்பச் சூழலில் கர்த்தடைய வேதமே அவருக்கு ஆறுதல் கொடுத்தது. உம்முடைய வேதத்தை நேசிக்கிறவர்களுக்கு மிகுந்த சமாதானமுண்டு; அவர்களுக்கு இடறலில்லை. (சங்கீதம் 119:165)

***4. அனுதின வாழ்வில் வழிநடத்தும் திருமறை:***

உம்முடைய சாட்சிகள் எனக்கு இன்பமும், என் ஆலோசனைக்காரருமாயிருக்கிறது. சங்கீதம் 119:24. திருமறை நம் வாழ்வில் ஆலோசனைக் கொடுத்து நம்மை நல்வழிப்படுத்துகிறதாயிருக்கிறது. பல வேளைகளில் எது சரி? எது தவறு? என்று தெரிந்தெடுக்க முடியாமல் திகைக்கிறோம். ஆனால் நமது வாழ்வில் சரியான முடிவுகளைத் தெரிந்தெடுக்க திருமறை நமக்கு உதவுகிறது. வேதத்தின் போதனைகளை மையமாக வைத்து நாம் முடிவுகள் எடுக்கும்போது, அது நம்மை சரியான பாதையில் அழைத்துச் செல்லுகிறது. எனவே திருமறையை ஒவ்வொரு நாளும் வாசித்து, நேசித்து, நமதாக்கி கொள்ளுவோம். ஒவ்வொரு நாளும் திருமறை வழியாக ஆண்டவர் நமக்கு நல் ஆலோசனைகளைத் தந்து நம்மை வழிநடத்துவராக.

கர்த்தர் உங்களையும் உங்கள் குடும்பத்தையும் ஆசீர்வதிப்பாராக!

**மீட்பரின் பணியில்**
***திருமதி.ஜெபா சாமுவேல்***

## பாக்கியமுள்ள ஜனம்

ஒரு தனி நபரோ அல்லது குடும்பமோ, நல்ல சொத்து, சுகம், செல்வத்துடன் வாழும்போது, மக்கள் அவர்களை ஆசீர்வதிக்கப்பட்டவர்கள் என்று கூறுவார்கள். பணக் கஷ்டமோ, வியாதியோ வந்து விட்டால், ஏதோ பெரிய பாவம் செய்திருக்கிறார்கள் என்று ஒரு கூட்டம் சொல்லும். மற்றொரு கூட்டம் இது இவர்கள் முன்னோர்கள் செய்த பாவத்தின் விளைவு அல்லது கர்த்தர் சோதிக்கிறார் என சொல்லும். ஒருவனின் ஆசீர்வதிக்கப்பட்ட வாழ்க்கையை அவன் பெற்றுள்ள சம்பத்து, அந்தஸ்து, பதவி ஆகியவற்றை வைத்தே உலகமானது நிர்ணயம் பண்ணுகிறது. தேவனின் பார்வை முற்றிலும் வேறுபட்டது. கர்த்தரை ஏற்றுக்கொண்ட பிள்ளைகளாகிய நமக்கு ஆசீர்வாதமான வாழ்க்கை என்பதின் அர்த்தம் என்ன?



### மேய்ப்பனாக இருந்து நம்மை வழிநடத்தும் கர்த்தர்

சங்கீதம் 23-ன் படி கர்த்தர் நம் மேய்ப்பராய் இருக்கிறார். இந்த சங்கீதம் ஒரு மேய்ப்பராக கர்த்தர் நமக்கு என்ன செய்கிறார் என்பதை அழகாக விவரிக்கிறது.



- நம் தேவைகள் அனைத்தையும் சந்திப்பவர் நம் கர்த்தர். குறைவுகளின் மத்தியில் நாம் மன நிறைவோடு வாழ நமக்கு உதவுபவர் அவர். செழிப்பான பாதையில் நம்மை வழி நடத்தி இளைப்பாறுதலையும் உற்சாகத்தையும் தருகிறார்.

- மரண இருள் போன்றதொரு துன்பம் நமக்கு வந்தாலும், பொல்லாப்பு நேராது நம்மை பாதுகாக்கிறார். தேற்றுகிறார்.

- சத்துருவின் போராட்டங்களுக்கு மத்தியில் இவ்வுலக வாழ்க்கையை நாம் தொடரும்போது, நம்மோடிருந்து, போராட்டங்களிலிருந்து வெற்றியளித்து, நம்மை உயர்த்துகிறார். ஒரு நிரம்பி வழியும் பாத்திரமாக நம்மை மாற்றுகிறார்.

- நம்முடைய வாழ்க்கை ஒரு அழிந்து போகும் வாழ்க்கை அல்ல. மரணத்திற்கு பின்பும் நமக்கு ஒரு நிச்சயமான வாழ்க்கை உண்டு. நன்மையையும் கிருபையையும் இவ்வுலகில் அளிக்கும் கர்த்தர் நித்திய நித்திய காலமாய்



அவருடைய வீட்டில் வாழும் பாக்கியத்தை நமக்கு தருகிறார். இவ்வுலகில் பிறந்தது முதல் அவருடைய வீட்டில் சேர்க்கும் வரை நம்மோடிருக்கும் மேய்ப்பர் நமக்கு கிடைத்திருப்பது அறிதற்கரிய பாக்கியம். மேய்ப்பர் நமக்கு தரும் வாழ்க்கை நிச்சயமாக ஒரு ஆசீர்வாதமானமான வாழ்க்கையாகும்.

### ♣ யாருக்கு இவ்விதமான ஆசீர்வாதம்?

***கர்த்தரைத் தெய்வமாகக் கொண்டிருக்கிற ஜனம் பாக்கியமுள்ளது*** (சங்கீதம் 144:15) என்ற வசனத்தின்படி கர்த்தராகிய இயேசுவை தன் சொந்த ரட்சகராக ஏற்றுக்கொண்டு, அவரை தன் வாழ்க்கையின் மேய்ப்பராக அனுமதிப்பவருக்கு மட்டுமே இந்த பாக்கியம் கிடைக்கும். எந்த சந்தேகமுமின்றி மேய்ப்பனின் சத்தம் கேட்டு செல்லும் ஆடுகளைப் போல, நாம் அவர் வார்த்தையின் படி அனுதினமும் அவர் பின் செல்ல வேண்டும். அவர் சத்தத்தைக் கேட்க, கர்த்தர் நம்முடைய கையில் கொடுத்திருக்கும் வேதம் கற்பிப்பதன்படி நடக்க வேண்டும். இல்லையேல் காணாமல் போன ஆட்டை போல வழி தவறி இளைய குமாரன் திண்டாடியதைப் போல் காரணமில்லாமல் திண்டாட நேரிடும்.

### ♣ ஆசீர்வாதமான வாழ்க்கை

பாக்கியமுள்ள ஜனமாக கர்த்தர் தாம் தெரிந்துகொண்டவர்களை வைத்திருப்பதற்கு காரணம், நாம் பிறருக்கு ஆசீர்வாதமாய் இருக்க வேண்டும் என்பதற்காகவே. “ஆகையால் நமக்குக் கிடைக்கும் சமயத்திற்குத்தக்கதாக, யாவருக்கும், விசேஷமாக விசுவாச குடும்பத்தார்களுக்கும், நன்மைசெய்யக்கடவோம்” (கலாத்தியர் 6:10). நம் வாழ்க்கை பாதையில் கர்த்தர் கொண்டு வருபவர்களுக்கெல்லாம் ஆசீர்வாதமாய் இருக்கும்படி நாம் கவனமாய் இருக்க வேண்டும். நம்முடைய வாழ்க்கையை காண்பவர்களுக்கு, அவர்களுடைய வாழ்க்கையில் ஒரு தாக்கம் உண்டாக வேண்டும்.

கர்த்தர், நாம் வாழ்க்கையிலே வேடிக்கை பார்ப்பவர்களாய் இராமல், மேலானவர்களாக இருக்க விரும்புகிறார். நாம் பிறரின் வாழ்க்கையிலே ஊற்றப்படுவதற்கும் விருப்பமுள்ளவர்களாக இருக்கும் அளவுக்கு அவர்களை உண்மையாக நேசிக்கவும், அவர்கள்மேல் அக்கறையுள்ளவர்களாக இருக்கும் மக்களாகவும் இருக்கவே கர்த்தர் விரும்புகிறார். நாம் பிறரை இயேசுவின் நாமத்திலே கட்டியெழுப்ப வேண்டும். அதனால் அவர்களும் வளர்ந்து இன்னும் அதிகமானவர்களை இயேசுவுக்குள்ளாக நடத்துவர். அப்பொழுது தான் நம் வாழ்க்கை ஒரு பரிபூரணமான ஆசீர்வாதமான வாழ்க்கையாகும். ஒவ்வொரு நாளும், ஒருவருக்கு உதவவும், ஆசீர்வாதமாக இருக்கவும், அன்பின் தாக்கத்தை அவர்கள் மீது ஏற்படுத்தவும் கர்த்தர் நமக்கு உதவி செய்வாராக.

**ஜெபசீலி ஆசீர்**

## வேதாகமப் பெண்கள்

### "அக்சாள்"

**[யோசுவா 15:13-19, நியாயாதிபதி 1:10-15]**

அக்சாள், காலேபின் மகள். அக்சாளுக்கு ஈரு, ஏலா, நாகாம் என்ற மூன்று சகோதரர்கள் இருந்தார்கள். அக்சாளின் தகப்பன் காலேப் உத்தமமாய்த் தேவனைப் பின்பற்றினார். அவரை யோசுவா ஆசீர்வதித்து எபிரோனை சுதந்தரமாகக் கொடுத்தான்.

தன் ஒரே மகள் அக்சாளை விவாகம் பண்ணுகிறவனை தெரிந்துகொள்ள ஒரு பரீட்சை வைத்தார். கீரியாத் செப்பேர் (தெபீர்) சங்காரம் பண்ணி பிடிக்கிறவனுக்கு தன் மகள் அக்சாளை விவாகம் பண்ணிக் கொடுப்பேன் என்று கூறினான். காலேபின் தம்பி கேனாசின் மகன் ஒத்னியேல் அதைப் பிடித்தான். எனவே அக்சாள் அவனுக்கு கொடுக்கப்பட்டாள்.

ஏற்கனவே அக்சாளை ஒத்னியேலுக்கு நன்கு தெரியும். ஆகிலும் தன் உயிரையே பணயம் வைத்து இராட்சதர்கள் நிறைந்த பாதுகாப்பற்ற மலைநாட்டைப் பிடிக்க காரணம், அக்சாள் என்னும் புத்தியுள்ள மனைவியாகிய நல்ல ஈவைப் பெறுவதற்காகவே.

அந்நாட்களில் குமாராருக்கு தான் சொத்துரிமைக் கொடுக்கப்பட்து. ஆனால் இங்கு காலேப் தன் மகளுக்கும் சொத்துரிமையை ஆசீர்வாதமாக் கொடுத்தாள். சில வறட்சியான இடங்களைக் கொடுத்தான். ஆனால் அக்சாளுக்கு அதில் திருப்தியில்லை. தன் தகப்பனின் ஆசீர்வாதங்களுக்குத் தானும் உரிமையானவள் என விசுவாசித்தாள். திருமணமாகி தன் கணவனுடன் கழுதையில் புறப்பட்டுச் செல்லும்போது தன் கணவனின் அனுமதியோடு தன் தகப்பனிடம் மிக உரிமையோடு, கழுதையிலிருந்து இறங்கி கூடுதல் ஆசீர்வாதம் கேட்டாள். நீர் எனக்கு தந்த நிலம் வறட்சியானது. நீர்ப்பாய்ச்சலான நிலத்தையும் தர வேண்டும் என்று தாழ்மையுடன் கேட்டாள். காலேப் தன் மகள் கேட்டதற்கும் விரும்பியதற்கும் அதிகமாய் மேற்புறத்திலும், கீழ்புறத்திலும் உள்ள நீர்ப்பாய்ச்சலான இடங்களைக் கொடுத்தான். அக்சாள் இஸ்ரவேலரின் முதல் நியாயாதிபதியின் மனைவியாகும் பாக்கியத்தைப் பெற்றாள்.

கர்த்தரை உத்தமமாய் பின்பற்றின காலேபின் வாழ்க்கையும், அவனது விசுவாசமும் அக்சாளுக்கு ஒரு தெய்வீக பாரம்பரிய முன் மாதிரியாய் இருந்தது. கணவனை கனப்படுத்தி அவனது அனுமதியோடு தன் தகப்பனின் நீர்ப்பாய்ச்சலான இடத்தை உரிமையோடு கேட்டுப் பெற்றுக்கொண்டாள். நம் குடும்ப வாழ்க்கையிலும் கணவனை கனம் பண்ணி, எல்லா காரியங்களையும் ஒளிவு, மறைவு இல்லாமல் பகிர்ந்து கலந்தாலோசித்து முடிவு செய்யும்போது நம் வாழ்க்கை ஆசீர்வாதமானதாக அமையும்.

நாமும் நம் பரம் தகப்பனிடம், அக்சாள் தன் தகப்பனிடம் உரிமையோடு கேட்டு பெற்றுக்கொண்டது போல இயேசு கிறிஸ்துவிடம் நம் தேவைகளை கேட்டுக்கொண்டு ஆசீர்வாதமான வாழ்க்கை வாழ்வோம்!

**ஷர்மிளா ராஜேஷ்**


**மார்ச் மாத தலைப்பு**

**பெண்கள்**

***Women***

# CHILDREN'S CORNER

Dear Children,




The theme this February is "**A BLESSED LIFE**".

The Hebrew word for blessing (berakah) is something that brings prosperity and life..

## WHAT IS A BLESSING?

https://www.youtube.com/watch?v=CgtzqRDOUI0

## SO WHAT DOES IT MEAN TO 'BE BLESSED'?

In the beatitudes (which means "the blessings"), Jesus lists those who are blessed.

People whose life situations seem far from a blessing: those who mourn, are meek, persecuted, and poor in spirit – are called Blessed.

For each blessed one Jesus names, He also announces a spiritual blessing.

## HOW TO LIVE A BLESSED LIFE


Living a blessed life isn't really about Getting but about Being…

- You can live a blessed life by pursuing Christ (Ephesians 1:3).
- You can live a blessed life by being a doer of the Word (James 1:22).
- You can live a blessed life by contemplating the lavishness of God's grace (Romans 4:8).


This upside-down kingdom was what the apostle Paul so eagerly proclaimed in Acts, and his letter to the Roman church.

Romans 4:7-8 says: "blessed is the man against whom the Lord will not count his sin."

## SAYING IT WITH PICTURES…




Praise the LORD, O my soul, and forget not all his benefits–
– Psalm 103:2 NIV




At the time of the banquet he sent his servant to tell those who had been invited, 'Come, for everything is now ready.'
— Luke 14:17 NIV

## NAMES OF GOD #2 JEHOVAH-ROHI




In the Hebrew language, Jehovah-Rohi means - The Lord Is My Shepherd.

When we first meet David in 1 Samuel 16, he's out in the fields watching the sheep.

Fifteen years passes between his anointing and his coronation, and through those years, David spent his time with the sheep. On occasion, he saved his flock from predators like lions and bears (1 Samuel 17:34-36).

Later when David composed a poem to celebrate God, he thought to himself, "Just as I have been a shepherd to these sheep and have cared for them and watched out for them and protected them from danger, Jehovah has done all that for me!


As the Good Shepherd, He dealt with the penalty of sin. As the Great Shepherd, He deals with the power of sin. As the Chief Shepherd, He's coming to take us from the very presence of sin.

**Daily Application** – It's wonderful to know the Twenty-Third Psalm, but how much better to know the Shepherd Himself!


If He is your Shepherd, you will have everything you need, including goodness and mercy all—not some, but all—the days of your life.

# TINY TOTS SECTION

## COLOR IN...



## THE PEOPLE BROUGHT LITTLE CHILDREN TO JESUS, AND HE BLESSED THEM. FIND 6 DIFFERENCES IN THE BELOW PICTURES





This family is building a gratitude tree all through November. Every day each person writes something they're Blessed with on a paper leaf and tapes it to the tree. Can you find the one thing that's written on three different leaves? Can you find the hidden objects?




BibleWise

# Blessed are the Peacemakers

Trace Jesus' message of blessing from Matthew 5:9

Blessed are the
peacemakers: for they
shall be called the
children of God.



# OLDER CHILDREN SECTION

## CHOOSE THE CORRECT OPTION – "A BLESSED LIFE"

1. Which Psalms begins with, "Blessed is the man... counsel of the wicked"?

a. Psalm 30 | b. Psalm 1
c. Psalm 37 | d. Psalm 91

2. In the Beatitudes, what is the reward for the meek? (Matt. 5:3 – 12)

a. They will be comforted. | b. They will inherit the Earth.
c. They will see God. | d. They will be filled.

3. According to Proverbs 10:22, what does the blessing of the Lord bring?

a. Wisdom, with care | b. Peace and Plenty
c. Wealth, without sorrow | d. Long Life

4. In Psalm 32:1, who is described as blessed? The one whose...

a. Trusts in the Lord. | b. Transgressions are forgiven.
c. Meditates on God's law. | d. Gives to the poor.

5. Which of the following is a blessing mentioned in Numbers 6:24-26?

a. The Lord will fight for you | b. The Lord Bless you and keep you
c. The Lord will grant your peace | d. The Lord will protect you

6. According to According to Jeremiah 17:7-8, who is blessed?

a. The one who fears the Lord | b. The one who trusts in the Lord
c. The one who keeps the Sabbath | d. The one who prays

7. What does Proverbs 3:13 say about the one who finds wisdom?

a. They are more powerful than kings. | b. They live a long life.
c. They are Blessed. | d. They will inherit the Earth.

8. In Luke 11:28, Jesus said, "Blessed are those who..."

a. Love their Neighbors | b. Hear the voice of God & Obey it.
c. Pray without ceasing | d. Thirst for Righteousness

9. In Revelation 22:14, who is described as blessed?

a. Those who are persecuted. | b. Those who do his commands.
c. Those who endure to the end. | d. Give Generously.

10. In Psalm 119:1, who are described as blessed?

a. Those whose ways are blameless | b. Those who sing Praises
c. Those who fear the Lord. | d. Give Generously.

11. In 2 Corinthians 9:8, what does God promise to do for those who give cheerfully?

a. Bless them with every good thing. | b. Make them abound in good work
c. Provide them with riches. | d. Give them peace and Long life.

12. In Proverbs 22:9, what is said about a generous person? They will be ...

a. Loved | b. Blessed | c. Prosper | d. Rich

# WHO DID JESUS CALL AS BEING BLESSED?

## Beatitude Fill in the Blank

It is important to remember each of the beatitudes. Test your memory by filling in the missing words in each of the beatitudes.

1. ______ are the ______ in spirit: for theirs is the ______ of heaven.
2. Blessed are they that ______ : for they shall be ______.
3. Blessed ______ the ______ : for they shall ______ the ______.
4. Happy are they which do ______ and ______ after ______ : for they shall be ______.
5. ______ are the ______ : for they ______ ______ mercy.
6. ______ are the ______ ______ ______ : for they shall ______ God.
7. Blessed are the ______ : for they shall be ______ the ______ of God.
8. Blessed are ______ which are ______ for righteousness ______ : for theirs is the kingdom of ______.
9. ______ are ______, when men ______ revile ______, and ______ you, and shall ______ all ______ of evil ______ you ______, for my sake. ______, and be ______ glad: for ______ is your ______ in ______ : for so persecuted ______ the ______ which were ______ you.

## TEEN: FOOD FOR THOUGHT!

THE SAVIOR'S **PARABLES**
Luke 11:5–13

# The Friend at Midnight

If a friend came to your house at midnight asking for bread, would you . . .



**GIVE IT TO THEM?**

OR



**TURN THEM AWAY?**





ILLUSTRATION BY ALBERT PINILLA

### THE ANSWER:

The Savior explained that even a person in bed, disturbed at midnight, would give bread to his friend if his friend asked long enough. And parents would give their children food when they ask for it.

### What does it mean?

We are imperfect, but we know how to give good gifts to those who ask us. Our Heavenly Father *is* perfect, and He knows how to give the very best gifts to His children (all of us—including you).

He loves you. He hears your prayers (even at midnight!) and knows your needs. He will help you in His time and way.



# MISSIONARY JOURNEY

## APOSTLE # 2 ANDREW

Like Peter, Andrew was a fisherman by trade; they made their living on the Sea of Galilee.

The call of Andrew in the Bible is a memorable story.

Andrew and John were originally disciples of John the Baptist.

They were present when John the Baptist pointed out Jesus as the Lamb of God (John 1:35–36), and they followed after Jesus (verse 37).

After spending the time with Jesus, Andrew became convinced that Jesus was the Messiah, and he acted immediately.


The first thing Andrew did was to find his brother Simon and tell him, 'We have found the Messiah' (that is, the Christ), and brought him to Jesus" (verses 40–42).

Thus, Andrew was the **FIRST** to bring another person to Him.

Andrew did not write any of the books of the Bible.

But the bible records him as being part of many significant events – working quietly in the background.

Tradition has it that Andrew was crucified on an X – shaped cross, because he thought himself unworthy to be crucified on the same type of cross as Jesus.






## Hope You Enjoyed All the Activities. Complete the Short Review Below…

1. The theme for the month of February is: ________________________________.
2. JEHOVAH-ROHI means "______________________________________."
3. Romans 4:7 – 8 says - _______________________________________________

   ________________________________________________________________.
4. ______________________ was the first to bring another person to Jesus.
5. When Jesus fed the 5000, _____________ found the boy with the 5 loaves and 2 fishes.

Children, God has given us a blessed life – with good parents, education, health and worldly comforts. Let us thank God for his blessings and remember to pray for those less fortunate than us.

God bless,

**Mrs. Briliya Jeyaseelan**.

# Answers to January Children's Corner

## CHOOSE THE CORRECT OPTION – God is Good

1. b. Psalm 136
2. b. Those who trust in Him.
3. c. Wrathful
4. c. Compassion.
5. b. God the Father
6. b. Those who seek Him.
7. b. It lasts for all generations.
8. a. It leads us to repentance.
9. b. His goodness
10. c. Give thanks to the Lord.
11. a. That the Lord is good
12. b. The Holy Spirit

## Hope You Enjoyed All the Activities. Complete the Short Review Below...

6. The theme for the month of January is: **God is Good**.
7. "Abba" is the Aramaic word meaning "**Daddy**" or "**Father**."
8. Ps. 136:1 says - **O give thanks unto the Lord; for he is good: for his mercy endured forever.**
9. **Simeon Peter** was one of the first followers of Jesus Christ.
10. History records that around A.D. 44, Peter undertook missionary journeys to **Lydda, Joppa, and Caesarea.**

***Note : Submit the answers of Bible Quiz to Pastor uncle or aunty on or before 25th of every month.***



# வேத வினாக்கள்

## வேதாகமம் முழுவதும்

### (சரியான விடையை திருமறை ஆதாரத்தோடு எழுதவும்)

**சம்பவம் நடந்த இடத்தின் பெயரை எழுதி வசன இருப்பிடமும் எழுதுக:**

1. எத்தியோப்பிய சேனை யூதாவுடன் யுத்தம் பண்ண வந்த இடம்?
2. சாலமோன் ராஜா யுத்தம் செய்த இடம்?
3. இராட்சதன் சிப்பாயி கொல்லப்பட்ட இடம்?
4. எஸ்போனின் ராஜா சீகோனை கர்த்தர் இஸ்ரவேலரிடம் ஒப்புக்கொடுத்த இடம்?
5. யோசுவா இஸ்ரவேலின் ஆண்களை இரண்டாம் தடவை விருத்தசேதனம் பண்ணின இடம்?
6. யோவாஸ் ராஜாவாக முடிசூட்டப்பட்ட இடம்?
7. ஸ்தேவானின் முகம் தேவதூதன் முகம் போலக் காணப்பட்ட இடம்?
8. இது கடினமான உபதேசம். யார் இதைக் கேட்பார்கள் என்று சொல்லப்பட்ட இடம்?
9. மரியாள் இயேசுவின் பாதத்தில் தைலம் பூசி தன் தலைமுடியால் துடைத்த இடம்?
10. மக்கெதோனியாவுக்குப் போகச் சொல்லி பவுலுக்கு இரவில் தரிசனம் கிடைத்த இடம்?

# ஜனவரி மாத வேத வினாக்களுக்கான பதில்கள்

| கேள்வி எண் | பதில் | திருமறை ஆதாரம் வேதாகமம் முழுவதும் |
|---|---|---|
| 1 | 300,000 | 2 நாளா. 17:14 |
| 2 | 6 | யோவான் 2:6 |
| 3 | 100 | எஸ்ரா 2:29 |
| 4 | 120,000 | யோனா 4:11 |
| 5 | 200,000 | 1 சாமு. 15:4 |
| 6 | 144,000 | வெளி. 14:3 |
| 7 | 120,000 | 1 ராஜா. 8:63 |
| 8 | 50,000 | 1 நாளா. 12:33 |
| 9 | 3000 | அப்.2:41 |
| 10 | 25,000 | நியா. 20:46 |
| 11 | 13 | ஆதி. 17:25 |
| 12 | 12 | லூக்கா 6:13 |
| 13 | 2025 | இந்த ஆண்டு |

*குறிப்பு : அந்தந்த மாதத்திற்குரிய வேத வினாக்களின் பதில்களை அந்தந்த மாதத்தில், 25-ம் தேதிக்குள் எழுதி ஆயரிடம் அல்லது ஆயரம்மாவிடம் ஒப்படைக்கவும்.*

## ஜனவரி மாத வேத வினாக்களுக்கு பதில் அளித்தவர்கள்

1. Mrs. Abisha Grace Rejin
2. Mrs. Ajita Ebi
3. Mrs.Annie Rosita
4. Mrs.Blessy Lipny
5. Mrs.Desigta Jaison
6. Mr.Emmanuel
7. Mrs.Esther Pauline Rani
8. Mrs.Febell Jeevagi Thomas
9. Mrs.Geetha kannan
10. Mrs.Grace shekar
11. Mrs.Helen Sharmila Ray
12. Mr.Jeba Jino
13. Mrs.Jasmine Sobha
14. Mrs.Jebaseeli Asir
15. Mrs.Jenila Gannraj.L
16. Mrs.Kishi Maher
17. Mrs.Manuel Sarah
18. Mrs.Praveena Arun
19. Mrs.Nandhini Rajkumar
20. Mr.Prawin Durai Sam
21. Mrs.Priya Ranjith Kumar
22. Mrs.Persis John
23. Mr.Salin Robert
24. Mrs.Sheeba Merlin
25. Mrs.Sheeba Herlin
26. Mrs.Sheneegah Stanly
27. Mrs.Sharmila Rajesh
28. Mr.Selva Shaji
29. Mrs.Subi Kishore
30. Mrs. Subija Jino
31. Mrs.Sweetilin Frank
32. Mrs.Valentine Sharmila Paul

## Children who answered January – 2025 Quiz

1. Aadhav Steve Matthew
2. Aaran
3. Adelyn Victoria Jeyaseelan
4. Brightson Timothy Raj
5. Benson Immanuel Raj
6. Camryn Robert.S
7. Clement Dave
8. Daniel Vanya (RUWAIS)
9. Danion Lemuel
10. Debi Lovisha
11. Evelyn Gracia
12. Evelyn Loria V
13. Gabrilyn Hannah
14. Galvin Robert.S
15. Giana Elin
16. Hadriel Adventier
17. Janey Titus
18. Jarick Aaron
19. Jaslin Shanna
20. Jaylan Paul Jino
21. Joanna Paul Jino
22. Johanan Paul Jino
23. Jerilyn Pushpam Nelson
24. Jevlyn Ana
25. Jeya Jehosheba Maher
26. Jeya Joshua Maher
27. Jim Scott
28. Jen Scudd
29. Jeffrey Samuel
30. Jenessa Johnson
31. Joel Abrakam
32. Joha Anit Manuel
33. Johan Sam Manuel
34. Kathryn Joan
35. Kev Shannen P.S
36. Liana Erin
37. Leona Juliet
38. Leonel I.J. Stalin
39. Linuel I.J. Sherwyn
40. Nijolin Jose
41. Rivqah Deby Rajkumar
42. Sam Jesvin Vincent
43. Starlyne Noble
44. Steffi Priscilla .R
45. Yedidiah Arun (Ruwais)
46. Yovaan jairus (Ruwais)



# இயேசுவின் சீடர் தோமா

***இந்தியாவின் அப்போஸ்தலர்***

**அழைப்பை ஏற்று அர்ப்பணித்த தோமா**

இயேசு கூறியதைக் கேட்ட அப்பனேயு, தோமாவை வாங்க ஒரு குறிப்பிட்ட அளவு வெள்ளிப் பணத்தை இயேசு கிறிஸ்துவினிடத்தில் கொடுத்தான். அப்பொழுது இயேசு கிறிஸ்து, “யோசேப்பு என்கிற தச்சனுடைய மகனான இயேசு கிறிஸ்துவாகிய நான், அடிமையாகிய தோமாவை கொந்தபோரஸ் மன்னனுடைய வணிகனான அப்பனேயுவிடம் விற்கிறேன்” என்று ஒரு ஒப்பந்தத்தை எழுதிக் கொடுத்தார்.

பின்பு தோமாவை சந்தித்த அப்பனேயு, இயேசு கிறிஸ்துவைக் காண்பித்து, “அவர்தான் உன் எஜமானரா?” என்று கேட்டான். அதற்கு தோமா, “ஆம். அவர்தான் என் எஜமானர்!” என்று கூறினார். உடனே அப்பனேயு, “நான் உன்னை அவரிடத்தில் விலை கொடுத்து வாங்கி இருக்கிறேன்” என்று இயேசு கிறிஸ்து தனக்கு எழுதிக் கொடுத்திருந்த ஒப்பந்தத்தைக் காண்பித்தான்.

மறுநாள் அதிகாலையிலேயே தோமா எழுந்து, ***“ஆண்டவரே, எங்கே அனுப்பினாலும் நான் செல்ல ஆயத்தம். உம்முடைய சித்தமே என் ஊழியத்தில் நிறைவேறட்டும்!”*** என்று ஜெபித்தார். பின்பு தோமா அப்பனேயுடன் இந்தியாவிற்கு பிரயாணம் செய்யத் தயாரானார்.

இயேசு கிறிஸ்து தோமாவை அப்பனேயுவிடம் ஒப்படைத்து, தோமாவை நோக்கி, “நீ எங்கு சென்றாலும், என் கிருபையும் உன்னோடு கூட இருக்கும்!” என்று சொல்லி அவரை ஆசீர்வதித்து, அப்பனேயு தனக்குக் கொடுத்த பணம் முழுவதையும் தோமாவினிடத்தில் கொடுத்து வழியனுப்பி வைத்தார்.

இந்த சம்பவத்தின் மூலம் அப்பனேயு இயேசு கிறிஸ்துவின் மீது நம்பிக்கை வைக்கத் துவங்கினான்.

### எகிப்து தேச ஊழியம்

தோமாவும், அப்பனேயுவும் தங்களது கப்பல் பயணத்தை துவக்கினர். அவர்கள் பிரயாணம் செய்த கப்பல், எகிப்து தேசத்திலுள்ள 'அலெக்சாந்திரியா' பட்டணத்தைப் போய் சேர்ந்தது. அதில் பயணம் செய்து வந்த அனைவரும் சற்று இளைப்பாறும்படியாக கப்பலை விட்டு இறங்கி அந்தப் பட்டணத்திற்குள் பிரவேசித்தார்கள்.

அந்த சமயத்தில், அங்குள்ள அரசனின் ஒரே மகளுடைய திருமண விழாவில் பங்கேற்க வேண்டும் என்ற அரசனின் அன்புக் கட்டளையால் அப்பனேயுவும், தோமாவும் அந்தத் திருமண விழிவாவில் பங்கேற்க உள்ளே போனார்கள்.

அங்கிருந்த அனைவரும் பல விதமான மது பானங்களைப் பருகிக் கொண்டு, உணவருந்திக் கொண்டிருந்தார்கள். தோமா அதில் ஒன்றைக் கூடத் தொடவில்லை. அதைப் பார்த்த சிலர், "இங்கிருக்கிற எதையும் புசிக்காமல் குடிக்காமல் இருக்கிற நீ எதற்காக இங்கு வந்தாய்?" என்று அவரிடத்தில் கேட்டார்கள்.

அதற்கு தோமா, "புசித்துக் குடிப்பதை விட என் இயேசு ராஜாவின் மகா மேன்மை பொருந்திய பணியை நிறைவேற்றவே நான் இங்கு வந்தேன். அதாவது, அவருடைய நற்செய்தியை அறிவிப்பதற்கும், வர இருக்கிற அவருடைய நியாயத்தீர்ப்பிலிருந்து உங்களைக் காக்கும் வழியைப் பற்றி உங்களுக்கு சொல்லவுமே நான் இங்கு வந்தேன்" என்று சொன்னார்.

அந்தத் திருமணவிழாவில், ஒரு எபிரேய பெண் மிக அழகாக புல்லாங்குழல் வாசித்தாள். அனைவரும் அதை மிகவும் ரசித்துக் கொண்டிருந்தபோது தோமா மட்டும் தரையையே பார்த்துக் கொண்டு இருந்தவராக, அழிவுக்கு நேராக சென்று கொண்டிருந்த அங்கிருந்தவர்களின் ஆத்தும இரட்சிப்பிற்காக தன் மனதில் மன்றாடி ஜெபித்துக் கொண்டிருந்தார்.

அன்றைய தினம் விழாவிற்கு வருகிறவர்களை உபசரிக்கிறதற்கென்று அரசனால் நியமிக்கப்பட்ட வேலைக்காரன் ஒருவன் தோமாவை கவனித்துக் கொண்டிருந்தான். அமைதியாக ஜெபித்துக் கொண்டிருந்த தோமாவைப் பார்த்த அவன், மிகுந்த கோபத்தோடு தோமாவின் கன்னத்தில் ஓங்கி அறைந்தான்.

அப்பொழுது தோமா, "என் தேவனே உன்னை மன்னித்து, நித்திய பாவ வாழ்வின் அழிவிலிருந்து உன்னைக் காப்பாராக!" என்று சொல்லி, தன்னை அடித்தவனை இயேசு கிறிஸ்துவைப் போல மன்னித்து ஆசீர்வதித்தார். பின்பு தோமா ஆட்டுக் குட்டியானவரின் கல்யாணத்தைக் குறித்த அழகிய பாடல் ஒன்றை அந்தத் திருமண விழாவில் பாடினார். அப்போது தோமாவின் முகம் மிகவும் பிரகாசமாக இருந்ததைப் பார்த்து அங்கிருந்த அனைவரும் ஆச்சரியப்பட்டார்கள்.

சற்று நேரம் கழித்து, தோமாவை கன்னத்தில் அறைந்தவன், அந்த திருமண விருந்திற்கு தேவைப்பட்ட தண்ணீரைக் கொண்டு வருவதற்காக அங்கிருந்தத தோட்டத்திலுள்ள ஒரு கிணற்றை நோக்கிப் போனான். போகும் வழியில் திடீரென சிங்கம் ஒன்று, அவனது இடது கையைத் துண்டாகக் கடித்துக் கொண்டு போய் விட்டது..........

**........தொடரும்**

# துணுக்குகள்

## பாடல் பிறந்த கதை

**இயேசுவே உம்மை தியானித்தால் [பாமாலை 258]**
**(Jesus, the very thought of Thee)**



1. இயேசுவே உம்மை தியானித்தால்
உள்ளம் கனியுமே
கண்ணார உம்மைக் காணுங்கால்
பரமானந்தமே.

2. மானிட மீட்பர் இயேசுவின்
சீர் நாமம் போலவே
இன் கீத நாதம் ஆய்ந்திடின்
உண்டோ இப்பாரிலே?

3. நீர் நொறுங்குண்ட நெஞ்சுக்கு
நம்பிக்கை ஆகுவீர்
நீர் சாந்தமுள்ள மாந்தர்க்கு
சந்தோஷம் ஈகுவீர்.

4. கேட்போர்க்கும் தேடுவோர்க்கும் நீர்
ஈவீர் எந்நன்மையும்
கண்டடைந்தோரின் பாக்கியசீர்
யார் சொல்ல முடியும்?

**‘நான் அவரைத் தியானிக்கும் தியானம் இனிதாயிருக்கும்’. சங்கீதம் 104:34**

1125ம் ஆண்டு பிரான்ஸ் நாட்டில் க்ரீநோபிள் மலைப்பகுதியில், ‘லாகிராண்டி சாட்ரூஸ்’ என்னும் ஒரு கிறிஸ்தவத் துறவிகள் மடம் (Monastery) இருந்தது. அந்த மடம் இருந்த இடம் இயற்கை அழகும், காட்சிகளும் நிறைந்தது. அந்த மடத்திலிருந்த துறவிகளில் ஒருவர், பெர்னார்டு க்ளெர்வோ (Bernard of Clairvaux) என்பவர். அவர் மடத்துக்குச் செல்லும்போது ஓர் அழகிய குதிரையில் சவாரி செய்வது வழக்கம். ஆயினும் அவர் செல்லும் பாதையிலுள்ள இயற்கைக் காட்சிகளை அவர் கண்டு களிக்கவில்லை. ஏனெனில் அவர் மனதில் எப்போதும் ஆவிக்குரியவைகளே நிரம்பியிருந்தன. ஒருமுறை அவர் ஜெனீவா ஏரிக்கரை வழியாக சவாரி செய்து தனது இருப்பிடத்தைச் சேர்ந்தவுடன்,

நண்பர் ஒருவர், 'ஏரியின் காட்சி எப்படியிருந்தது?' என அவரைக் கேட்க, அவர், 'எந்த ஏரியைப் பற்றிக் கேட்கிறீர்கள்? நான் ஏரி ஒன்றையும் காணவில்லையே' எனப் பதிலளித்தார். ஏனெனில் அவர் எப்போதும் பரலோக ராஜ்ஜியத்தைக் குறித்தே தியானம் செய்து கொண்டிருந்தார். இவ்விதமாக, அவர் ஆண்டவரின் அன்பைக் குறித்துத் தியானம் செய்துகொண்டிருக்கும்போது, 'இயேசுவே உம்மைத் தியானித்தால்' என்னும் பாடல் அவர் மனதில் உருவாயிற்று. சங்கீதம் 104:34ல் தாவீது பாடினதுபோல, ஆண்டவரைத் தியானிக்கும் தியானம் அவரது உள்ளத்திற்கு இனிதாயிருந்து அதைக் கனியச் செய்தது. இப்பாடல் முதலில் லத்தீன் மொழியில் எழுதப்பட்டு, எட்வர்டு காஸ்வால் என்பவரால் 1850ல் ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கப்பட்டது.

இப்பாடலை எழுதிய பரி. பெர்னார்டு க்ளெர்வோ என்பவர் 1091ம் ஆண்டு, பிரான்ஸ் நாட்டில், பர்கண்டி மாகாணத்தில் பாண்டேயின் என்னும் கிராமத்தில் ஒரு பிரபுக் குடும்பத்தில் பிறந்தார். இருபத்திரண்டு வயதாக இருக்கையில், 'லாகிராண்டி சாட்ரூஸ்' என்னும் துறவி மடத்தைச் சேர்ந்து தமது திருப்பணியை ஆரம்பித்தார். அவர் மடத்தைச் சேர்ந்த மூன்றாண்டுகளுக்குள் அவரது ஊக்கமான உழைப்பினாலும், முன்மாதிரியான வாழ்க்கையினாலும், ஏராளமானபேர் மடத்தில் சேர்ந்து, மடம் மிக முன்னேற்றமடைந்தது. அவருக்குப் பல உயர் பதவிகளும் பரிசுகளும் வழங்கப்பட்டன. ஆனால் அவற்றையெல்லாம் அவர் மறுத்து, தம் வாழ்க்கை முழுவதையும் ஆசிரமத்திலேயே கழித்தார். ஜெர்மனி, இங்கிலாந்து, பிரான்ஸ் நாட்டு மன்னர்களும், ரோமாபுரியிலுள்ள பாப்பரசரும் இவரது ஆலோசனையை அடிக்கடி நாடினர். பல நூற்றாண்டுகளுக்குப் பின் மார்ட்டின் லூத்தர் என்னும் சீர்திருத்தவாதி, பரி. பெர்னாடைக் குறித்து 'நான் கேட்டறிந்த கிறிஸ்தவ துறவிகள் எல்லாரையும் விட இவரே மிகச்சிறந்த பக்திமான்' எனப்போற்றியுள்ளார்.

இயேசுவே உம்மை தியானித்தால்' என்னும் பாடலைக் குறித்து, டேவிட் லிவிங்ஸ்டன் என்னும் புகழ்பெற்ற மிஷனெரி எழுதியதாவது. 'பரி. பெர்னார்டு எழுதிய இப்பாடலானது ஆப்பிரிக்காவின் அகன்ற காடுகளில் நான் சுற்றித் திரியும்போது என் காதுகளில் தொனித்துக்கொண்டேயிருக்கிறது. நான் மிகப்பிரியமாகப் பாடும் பாடல்களில் இது ஒன்றாகும்'.

பரி. பெர்னர்டு எழுதிய பாடல்களில் முக்கியமானவை:

'இரத்தம் காயம் குத்தும்' – பாமாலை 102
'ஜீவாதிபதி ஜோதியே' – பாமாலை 263

பரி. பெர்னார்டு 1153ம் ஆண்டு, தமது 62ம் வயதில் மறுமைக்குட்பட்டார்.

# ஆலயப் பக்கம்



## ஆராதனை மற்றும் நிகழ்வுகள் – பிப்ரவரி 2025

| தேதி | நாள் | நேரம் | நிகழ்வுகள் |
|---|---|---|---|
| 2 | ஞாயிறு | 11.00 pm – 1.00 pm | உபவாச ஜெபம் |
| | | 2.00 pm – 3.00 pm | பெண்கள் ஐக்கிய சங்கம் & ஆண்கள் ஐக்கிய சங்கம் |
| 4 | செவ்வாய் | 8.00 pm – 9.00 pm | ஏரியா ஜெபக்குழு |
| 7 | வெள்ளி | 6.30 pm – 8.00 pm | Junior Church |
| | | 8.30 pm – 11.00 pm | தூய திருவிருந்து ஆராதனை - St.Andrew's church |
| 9 | ஞாயிறு | 9.30 pm – 4.30 pm | Family & Couples Retreat – Tamil Harvest |
| 11 | செவ்வாய் | 8.00 pm – 9.00 pm | ஏரியா ஜெபக்குழு |
| 14 | வெள்ளி | 6.30 pm – 8.00 pm | Junior Church |
| | | 8.30 pm – 11.00 pm | மருத்துவ துறை பணியாளர்கள் சிறப்பு ஆராதனை - St.Andrew's church |
| 16 | ஞாயிறு | 7.00 pm – 8.00 pm | பெண்கள் ஐக்கிய சங்கம் – ஆயர் இல்லம் |
| 18 | செவ்வாய் | 8.00 pm – 9.00 pm | ஒருங்கிணைந்த வேத ஆராய்ச்சி - ஆயர் இல்லம் |
| 21 | வெள்ளி | 8.30 pm – 11.00 pm | தூய திருவிருந்து ஆராதனை - St.Andrew's church |
| 23 | ஞாயிறு | 8.00 pm – 9.00 pm | வாலிபர் கூடுகை |
| 25 | செவ்வாய் | 8.00 pm – 9.00 pm | ஏரியா ஜெபக்குழு |
| 28 | வெள்ளி | 8.30 pm – 11.00 pm | தூய ஆராதனை - St.Andrew's church |

# ஆராதனை பாடல்கள் – பிப்ரவரி 2025



| | |
|---|---|
| **07-02-25** | |
| பாமாலை – 16 | ஆ கர்த்தாவே தாழ்மையாக |
| பாமாலை – 45 | மகிழ்ச்சி ஓய்வுநாளே |
| கீர்த்தனை – 83 & 111 | இயேசுவின் நாமமே திருநாமம்<br>இயேசு நாமம் ஒன்றை நம்புவீர் |
| பாமாலை – 33 | இந்நாள்வரைக்கும், கர்த்தரே |
| **14-02-25** | |
| பாமாலை – 267 | போற்றும் போற்றும் |
| பாமாலை – 224 | நாதா, ஜீவன் சுகம் தந்தீர் |
| கீர்த்தனை – 106 & 108 | ஒரு மருந்தரும் குருமருந்து<br>விசுவாசியின் காதில் பட |
| பாமாலை – 37 | ஞான நாதா, வானம் பூமி |
| **21-02-25** | |
| பாமாலை – 31 | கீழ் வான கோடியின் |
| பாமாலை – 243 | நேர்த்தியானதனைத்தும் |
| கீர்த்தனை – 6 & 99 | சீர் மிகு வான்புவி தேவா<br>ஆவியை அருளுமே சுவாமி |
| கீர்த்தனை – 322 | சூரியன் மறைந்து அந்தகாரம் |
| **28-02-25** | |
| பாமாலை – 3 | உன்னதம் ஆழம் எங்கேயும் |
| பாமாலை – 361 | ஒப்பில்லாத திவ்விய அன்பே |
| கீர்த்தனை – 98 & 193 | ஆவியை மழைபோலேயூற்றும்<br>எல்லாம் இயேசுவே எனக் |
| கீர்த்தனை – 5 | சருவ லோகாதிபா, நமஸ்காரம் |

*கர்த்தர் நல்லவர், இக்கட்டு நாளிலே அரணான கோட்டை; நாகூம் 1:7a*

## திருமறை பாட ஒழுங்குகள் – பிப்ரவரி 2025

| தேதி | தியானப்பொருள் | பழைய ஏற்பாடு | நிருப வாக்கியம் | நற்செய்திப் பகுதி | சங்கீதம் |
|---|---|---|---|---|---|
| **07-02-25** | கிறிஸ்து திருமுன்நிலைப்படுத்தல் | 1 சாமு. 1:19-28 | ரோமர் 11:33-12:1,2 | லூக்கா 2:22-40 | - |
| **14-02-25** | சுகமளிக்கும் திருப்பணி | யாத். 1:8-22 | 2 கொரி. 12:1-10 | மத்தேயு 15:21-28 | 8 |
| **21-02-25** | சார்ந்திருக்கும் படைப்புகள் | ஆதி. 2:1-15 | ரோமர் 8:14-23 | மத்தேயு 13:1-9 | - |
| **28-02-25** | திருமறையின் கண்ணோட்டத்தில் ஆசீர்வாதம் | நீதி. 10:1-12 | 1 தீமோ. 6:1-14 | மத்தேயு 6:24-34 | 146 |

## செவ்வாய் கிழமை – ஏரியா ஜெப குழுவிற்கான வேத பாடங்கள்

| நாள் | வேதபகுதி | | ஆயர் Schedule |
|---|---|---|---|
| **04-02-25** | நீதிமொழிகள் | 1:19-33 | Hamdan |
| **11-02-25** | நீதிமொழிகள் | 2 | Muroor |
| **18-02-25** | ஒருங்கிணைந்த வேத ஆராய்ச்சி | | |
| **25-02-25** | நீதிமொழிகள் | 3:1-18 | Mussafah |

**கடந்த மாத தூது பத்திரிக்கைகளைப் படிப்பதற்கான இணைப்பு**



# BIRTHDAY - FEBRUARY




| Birth Date | Title | Name |
|---|---|---|
| 1 | Mrs. | Jansi Salini |
| 2 | Mrs. | Jasmin Jebachristy Ananthan |
| 2 | Master. | Joel Wilfred |
| 2 | Baby | Rayhan Shalom Raj |
| 3 | Mr. | John Andrews |
| 5 | Mr. | Dannie Victor |
| 5 | Mr. | Vino Thampiraj |
| 6 | Master. | Linuel Sherwyn |
| 6 | Master | Sangamithran D L |
| 8 | Mr. | John Adithya A |
| 8 | Master. | Edmer Fergus. R |
| 8 | Mrs. | Tamilarasi |
| 9 | Baby | Brian Steve Judah |
| 10 | Ms. | Alexia Carlyn |
| 11 | Mrs. | Selvi Thavasu |
| 12 | Mr. | Barnabas Kevin |
| 12 | Master. | Aaron Peter Samuel |
| 14 | Ms. | Feny Hannah Albert |
| 14 | Master. | Leonel Stalin |
| 14 | Ms. | Doreen Amadea |
| 15 | Mr. | Asir Kanagaraj |
| 15 | Ms. | Kavi Yalini Arun |
| 16 | Mrs. | Arul Mary Larata Helan. J |
| 16 | Mrs | R. Shiny Brindha |
| 17 | Mr. | Sam Winston |
| 17 | Master. | Mishael Wesley |
| 18 | Mr. | Rohan Nayagam |
| 18 | Mrs. | Jacqulin Rani |
| 19 | Mr. | Daniel Nishanth Alexander |
| 19 | Mrs. | Stella Darling Rajam |
| 20 | Miss. | Debi Lovisha S |
| 23 | Mr. | Renald Daniel R |
| 23 | Ms. | Eunice Graclyn |
| 24 | Mr. | Jino. J.D |
| 24 | Mrs. | R. Rajalin Jaba Rani |
| 25 | Mr. | Aaron Samuel Paul |
| 25 | Mr. | Jose Wesly. J |
| 26 | Mr. | Abner Theophilus |
| 28 | Mrs. | Israel Sinha Devi |
| 28 | Mr. | Rajat Kevin. R |
| 28 | Mrs. | Gnana Mala Melwin |

## WEDDING ANNIVERSARY – FEBRUARY




| Wedding Date | Title | Name |
|---|---|---|
| 2 | Mr. | Praveen Singh |
| 6 | Mr. | Pravin Kumar Noah S |
| 6 | Mr. | Jaya Chandraraja |
| 7 | Mr. | Aron T K |
| 7 | Mr. | Jacob Jerald Ponselvan |
| 14 | Mr. | Joseph Immanuel Jamal James |
| 14 | Mr. | Sunil Jaymurthy |
| 15 | Mr. | Ashok Raj Kumar |
| 16 | Mr. | Samuel Kirubasingh Appadurai |
| 16 | Mr. | Rev. Adoni Manuel |
| 22 | Mr. | Titus Agastin |
| 22 | Mr. | Arun A |
| 24 | Mr. | George Kirubaharan |

## புதிய அங்கத்தினர்களின் சேர்க்கை விவரம்




| S.No. | Name | Mem. No. |
|---|---|---|
| 1 | Mr. Sunil Manuel Augustine | 496 |
| 2 | Mr. Justin Pious Raj | 497 |








Junior Church Retreat


S - Seek
T - Think
O - Overcome
P - Pray and praise


Hope
Believing that what you are waiting for will happen







CSI TAMIL PARISH ABU DHABI
HOPE IN GOD'S PROMISES
Psalm 119:114
You are my refuge and my shield;
I have put my hope in your word.
JUNIOR CHURCH
RETREAT
17-JAN-25, 06:30 PM
ST. ANDREWS COMMUNITY HALL










Church Picnic






ASTRONAUT SPACE







Junior Church Picnic
















NASA




I WILL MAKE
YOUR NAME
Great,
AND YOU
WILL BE A
Blessing.
GENESIS 12:2